# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 142/2021 நாள்.17.11.25

DW2- திரு. சசிகுமார் த/பெ. திரு. பவுந்த்ராவ்

வாதிதரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஆட்டோ ஓட்டுகிறேன். எனக்கு வருமானம் எவ்வளவு என்றால் ரூ500 முதல் 600 வரை இருக்கும். எனது வருமானம் எனது குடும்பசெலவிற்கு சரியாக இருக்குமா என்றால் இருக்கும். ஏதேனும் தீடிர் செலவு என்றால் வெளியில் கடன் வாங்க வேண்டும் என்றால் ஆமாம். கடன் கொடுத்ததாக சொல்வது பொய் என்றும் எனக்கு கடன் கொடுக்கும் அளவுக்கு சக்தி இல்லை என்றால் சரியல்ல. நிரஞ்சன் வெளியில் கடன் வாங்கியபோது எங்கேனும் நான் ஜாமீன் கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் அழைத்ததும் இல்லை போட்டதும் இல்லை. 2017 வருடம் நிரஞ்சன் அப்பா கடனை தீர்த்தற்காக கடன் கேட்டாரா என்றால் கேட்டார் என்னால் முடியாது என்று சொல்லிவிட்டேன். நிரஞ்சன் தனியார் வங்கியில் கடன் வாங்கியதாக சொல்லுகிறேனே அவர் வாங்கியபோது நான் உடன் போனேனா என்றால் இல்லை. அவர் சொல்லிதான் தெரியுமா என்றால் ஆமாம். அவர் அப்பா வாங்கிய கடனை அவர் அப்பா அடைத்தது எனக்கு தெரியாது என்றால் ஆமாம். நிரஞ்சன் எனக்கு நண்பர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் நண்பர் என்ற முறையில் கடன் வாங்கியது குறித்து அவருடைய ஆவணம் என்னிடம் இல்லை என்றால் ஆமாம்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.